விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 02.30 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 03.21 p.m.

# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.I, Mettur

## Case No : M.C.2/2024

**Prosecution witness :.ம சா. 1** **Date : 09.10.2024**

| | |
|---|---|
| **Name : ஹர்ஷனா** | **Taluk : மேட்டூர்** |
| **Husband Name : ஹரிபிரபாகரன்** | **Calling : –** |
| **Village : நங்கவள்ளி** | **Age : 27** |

(Petitioner Present. Respondent present)

**குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.A., English, B.Ed., படித்துள்ளேன். நான் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளேன். 75% மதிப்பெண்கள் கல்லூரி படித்த காலத்தில் பெற்றுள்ளேன். நான் விவரமான பெண் என்றால் சரிதான். என்னுடைய மகன் 2ம் மனுதாரருக்கு 2 ½ வயதாகிறது. என்னுடைய மகன் 2ம் மனுதாரரை இந்த நீதிமன்றத்திற்கு இன்று எடுத்து வந்துள்ளேன். ஜீவனாம்சம் வேண்டி இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்த மனுவில் 17ம் பத்தியில் தலா 1 லட்சம் ஜீவனாம்சம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். தர்மபுரியில் குடும்ப நல நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் HMOP NO.88/2023 ல் சேர்ந்து வாழ வேண்டுமென்று ஒரு மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அதில் நான் சேர்ந்து வாழ வேண்டுமென்று எதிர் உரை தாக்கல் செய்தேன். மேற்படி மனு நிலுவையில் இருக்கும் நிலையில் நான் மாதந்தோறும் ஜீவனாம்சமாக ரூ.15,000/–மும், வழக்கு

செலவிற்காக ரூ.10,000/-மும் வேண்டுமென்று மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தற்போது எதற்காக 1 லட்சம் கேட்கிறேன் என்றால் எனக்கும், என் குழந்தையின் மருத்துவ செலவிற்கும், என் குழந்தை மற்றும் எனது சாப்பாட்டு செலவிற்கும் நான் ரூ.1,00,000/- தற்போது கேட்டுள்ளேன்.

நானும் எனது கணவரும் சேர்ந்து 7 மாதங்கள் வாழ்ந்தோம். தர்மபுரியில் 1 ½ மாதங்கள் இருந்தேன். சென்னையில் 7 மாதங்கள் இருந்தேன். வளைகாப்பு முடிந்து 15 நாட்கள் தர்மபுரியில் இருந்தேன். வளைகாப்பு 25.04.2022 ம் தேதி தர்மபுரியில் ஒரு மண்டபத்தில் நடந்தது. வளைகாப்பு முடிந்தவுடன் சம்பிரதாயப்படி தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். அதன் படி நான் 25.04.2022 ம் தேதி என் தாயார் வீட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஜீவனாம்ச மனுவில் என் கணவர், மாமனார் மற்றும் மாமியார் ஆகியோரை பற்றி ஒரு நல்ல அபிப்ராயத்தை ஒரு நல்ல அம்சமாக போட்டுள்ளேனா என்றால் நான் எதுவும் சொல்லவில்லை. அவர்களிடம் நல்ல அம்சம் இல்லை என்பதால் போடவில்லையா என்றால் ஆமாம். என் கணவர் நல்லவர் தான். அவரது பெற்றோர் மற்றும் தாய் மாமா பேச்சை கேட்டு தான் இவ்வாறு நடந்து கொண்டார். என் கணவர் எந்த அடிப்படையில் நல்லவர் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

குடும்ப நல நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த இடைக்கால மனு உத்தரவுப்படி உத்தரவான இடைக்கால ஜீவனாம்ச தொகை ரூ.20,000/- பெற்றுக் கொண்டேன். இடைக்கால ஜீவனாம்சமாக

மாதம் ரூ.5000/– வீதம் நான்கு மாதங்களுக்கு ரூ.20,000/– பெற்றுக்கொண்டேன். பின்னிட்டு அந்த மனு எதிர்மனுதாரரால் வாபஸ் பெறப்பட்டது. சேர்ந்து வாழ வேண்டுமென்று மனு தாக்கல் செய்து நிலுவையில் இருந்த போது எத்தனை பேர் எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்றோம் என்றால் இரண்டு வழக்கறிஞர்கள், எனது பெற்றோர்கள், எனது அண்ணா, எனது பெரியப்பா, எனது பெரியப்பாவின் பங்காளிகளையும் அழைத்துச் சென்றோம்.

தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படம் தான் அந்த சமயத்தில் அந்த வீட்டின் முன்னால் மாட்டப்பட்டிருந்த கேமராவில் பதிவானது என்று சொன்னால் சரிதான். ஆனால், நாங்கள் எந்த பிரச்சனையும் செய்யவில்லை. அந்த வீடியோ பதிவையும் தாக்கல் செய்யவில்லை. **நான்கு புகைப்படங்கள் எ.ம.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 22.09.2023ம் தேதி நாங்கள் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்றோம் என்றால் சரிதான். இந்த சம்பவத்திற்கு பின்னிட்டும் இடைக்கால ஜீவனாம்சம் உத்தரவுப்படி நான் பெற்றுக் கொண்ட பின்னிட்டு தான் வழக்கை எதிர்மனுதாரர் வாபஸ் பெற்றுக் கொண்டார் என்றால் சரிதான். ஆனால் அன்றைய தேதியில் நான் என்னுடைய நகைகள் எதிர்மனுதாரர்களிடம் இருந்தது என்று சொல்லி மனு கொடுத்தேன். அந்த மனு Check and Call on என்று போடப்பட்டது. அதற்குள் எதிர்மனுதாரர் அந்த மனுவை வாபஸ் பெற்றுக் கொண்டார்.

எதிர்மனுதாரர் அதன் பின்னிட்டு அதே நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு நான் மேட்டூர் சார்பு

நீதிமன்றத்தில் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மனு தாக்கல் செய்து அந்த மனு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் DVC வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் மனு தாக்கல் செய்யப்பட்டு பின்னிட்டு வாபஸ் பெறப்பட்டது. அந்த மனுவில் உண்மை தன்மை இல்லை என்று வாபஸ் பெற்றேனா என்றால் சரியல்ல.

உயர் நீதிமன்றத்தில் தர்மபுரியில் உள்ள வழக்குகள் மேட்டூருக்கு மாற்றம் செய்ய Tr.O.P.No.162/2024 என்ற மனு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த மனு மீது நான் தொடர் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு Stay ல் உள்ளதாக எனது வழக்கறிஞர் கூறினார். குடும்பநல நீதிமன்றம், தர்மபுரியில் தற்போது நடந்து வரும் வழக்கில் நான் ஆஜராவதில்லை என்றால் சரிதான். மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் நான் ஆஜராகி வருகிறேன் என்றால் சரிதான்.

எனக்கு திருமணத்தின் போது 100 பவுன் போட்டார்கள் என இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு 102 பவுனும், எனது கணவருக்கு 10 பவுன் செயின் மற்றும் பிராஸ்லெட், மோதிரம்–1 பவுன், தீபாவளி சீராக 8 பவுன் செயினை எனக்கும், என் கணவருக்கு 1 பவுன் மோதிரமும் போட்டார்கள். என் வளைகாப்புக்கு 10 பவுன் வளையல், என் கணவருக்கு 1 மோதிரமும் போட்டார்கள். நிச்சயத்திற்கும் 1 பவுன் மோதிரம் என் கணவருக்கு போட்டார்கள். எதிர்மனுதாரர் எனக்கு 6 பவுனில் ஒரு செயின் போட்டார்கள்.

எனக்கு போட்ட 102 பவுனும் எனது பெற்றோர்கள் அவர்கள்

விருப்பப்படி எனக்கு போட்டார்கள் என்றால் சரிதான். எனக்கு சீர்வரிசை செய்தால் நான் நன்றாக வாழ்வேன் என்பதால் எனது பெற்றோர்கள் எனக்கு சீர் செய்தார்கள்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**